## சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – அரசு / அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் அரசு / அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகளில் நவீன ஆய்வக உபகரணங்கள் / கணினிகள் மற்றும் கணினி சார்ந்த பொருட்கள் / அறைகலன்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்வது – முதல்வரின் நிதி அதிகார உச்சவரம்பினை உயர்த்துதல் தொழில் நுட்பக்கல்வி ஆணையர் நிலையிலேயே அனுமதி வழங்கியது – பின்னேற்பு வழங்குதல் – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

## உயர்கல்வி (சி2)த் துறை

அரசாணை (நிலை) எண்.**242** நாள்: **04.11.2022.**

சுபகிருது வருடம், ஐப்பசி - 18

திருவள்ளுவர் ஆண்டு - 2053

படிக்கப்பட்டவை:-

-------

1. அரசாணை (நிலை) எண்.166,உயர்கல்வி (சி2)த்துறை, நாள் 29.06.2017.
2. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் எண்.22542/கே1/2021; நாள் 28.06.2021 மற்றும் 12.08.2022.
3. தொழில்நுட்பக் கல்வி இயக்கக சுற்றறிக்கை எண்.51843/கே1/2021, நாள் 01.03.2022.
4. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் எண்.51843/கே1/2021, நாள் 14.03.2022 மற்றும் 26.07.2022.

-----

**ஆணை:-**

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தொழில்நுட்பக்

கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு / அரசு நிதியுதவிபெறும் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்களுக்கு, சம்பந்தப்பட்ட பயிலக மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு தேவையான நவீன உபகரணங்கள் மற்றும் பண்டகங்களை கொள்முதல் விதிமுறைகளுக்கு உட்பட்டு வாங்க நிதி அதிகாரஉச்சவரம்பினை உயர்த்தி ஆணை வழங்கப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் 14.03.2021 நாளிட்ட கடிதத்தில், அரசாணை (நிலை) எண்.166, உயர்கல்வி (சி2) துறை, நாள்.29.6.2017-ல் தொழில்நுட்பக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு / அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்களுக்கு, சம்பந்தப்பட்ட பயிலக மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு தேவையான நவீன உபகரணங்கள் மற்றும் பண்டகங்களை கொள்முதல் செய்வதற்கு நிர்ணயம் செய்யப்பட்ட நிதி அதிகார உச்சவரம்பினை உயர்த்தி அரசாணை வழங்கிட கோரி 28.06.2021 அன்று அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது என்றும் அரசிடமிருந்து அனுமதி ஆணை எதிர்நோக்கப்பட்ட நிலையில், 2021-2022-ம் நிதியாண்டு முடிவுறும் தருவாயில் இருந்ததாலும், மாணவர்களின் நலன் கருதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை அரசுக்கு சரண் செய்வதை தவிர்க்கும் பொருட்டும், அரசு / அரசுநிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்களின் நிதி அதிகார உச்சவரம்பினை பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி உயர்த்தி, மூன்றாவதாக படிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்வி இயக்கக சுற்றறிக்கை எண். 51843/கே1/2021, நாள். 1.3.2022-ன் மூலம் தொழில் நுட்பக் கல்வி ஆணையர் நிலையிலேயே அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். :-

| வ. எ ண் | பயிலகங்கள் | தற்போதைய நிதி உச்சவரம்பு ரூ. | தற்போது உயர்த்தி வழங்கும் நிதி அளவின் உச்சவரம்பு ரூ. |
|---|---|---|---|
| 1. | அரசினர் பொறியியல் கல்லூரிகள் முதல்வர்களுக்கான நிதி உச்சவரம்பு | ரூ.4,00,000/- | ரூ.10,00,000/- |
| 2. | அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்கள் | ரூ.2,00,000/- | ரூ.5,00,000/- |
| 3, | அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் | ரூ.1,00,000/- | ரூ.2,00,000/- |

3. எனவே, இவ்வாறு அரசு / அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்களின் நிதி அதிகார உச்சவரம்பினை உயர்த்தி தொழில் நுட்பக் கல்வி ஆணையர் நிலையிலேயே அனுமதி வழங்கப்பட்ட நிகழ்விற்கு பின்னேற்பு வழங்குமாறு தொழில் நுட்பக் கல்வி ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

4. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அரசு / அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்களின் சம்பந்தப்பட்ட பயிலக மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு தேவையான நவீன உபகரணங்கள் மற்றும் பண்டகங்களை கொள்முதல் செய்வதற்கு நிர்ணயம் செய்யப்பட்ட நிதி அதிகார உச்சவரம்பினை மேலே பத்தி-2ல் காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் நிலையிலேயே உயர்த்தி அனுமதி ஆணை வழங்கப்பட்டதற்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பின்னேற்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(அ) இவ்வாறு உயர்த்தப்பட்டுள்ள முதல்வர்களின் நிதி அதிகார உச்சவரம்பு 5 ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும் .

(ஆ) இம்முறையில் ,முன்னேற்றம் மற்றும் உள்ளபடியான செயல்பாட்டின் அடிப்படையில் இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு, அதாவது 2024 - 2025-ல் அடுத்த முடிவு மேற்கொள்ளப்படும்.

(இ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் சட்டம், 1998 மற்றும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் விதிகள், 2000 ஆகியவை முறையாக பின்பற்றப்படவேண்டும்.

5. இவ்வாணை நிதித்துறையின் அசா.எண். 45916/நிதி (கல்வி-I) / 2022, நாள்.31.10.2022-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை – 600025.

முதல்வர்கள், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும்
பொறியியற் கல்லூரிகள் / பாலிடெக்னிக் கல்லூரிகள்
மற்றும் சிறப்பு பயிலகங்கள்,
( தொழில்நுட்பக் கல்வி ஆணையர், வழியாக)

மாநிலக்கணக்காயர், சென்னை – 600018 / 600035.

நகல்

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 600009.

அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர்,
உயர்கல்வித்துறை, சென்னை - 600009.

நிதி(கல்வி-I) த் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600009.

இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

4/11/2022

அரசு சார்புச் செயலாளர்.

4/11/2022